இன்றைக்கு உற்பத்திப்பெருக்கம் உற்பத்திப் பெருக்கம் என்று சொல்கிறோமே அது எங்கிருந்து வரும்? பசுமைப் புரட்சி வெண்மைப் புரட்சி என்ற வார்த்தைகள் எல்லாம் பழைய காலம். 1967 ஆம் ஆண்டுத் தேர்தலில்—நமக்குத் தெரியும்—காங்கிரஸ் கட்சி எவ்வளவு பெரிய போஸ்டர்களை எல்லாம் — ஐந்தாண்டுத் திட்டம் போட்டோம், ரோடுகள் போட்டோம், தண்ணீர் வந்தது, எலக்டிரிக் கம்பி வந்துவிட்டது என்றெல்லாம் போட்டாலும்—விவசாயத் தொழிலாளிகள், தொழிலாளர்கள் அவைகளையெல்லாம் இழுத்துவிட்டு விட்டனர். தி.மு.க. அரசியலிலிருந்து ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. ஆகவே அந்த போஸ்டர்கள் வெற்றி பெறாது. மக்களுடைய உள்ளுணர்வுகள் தான் வெற்றி பெறும். இன்றைய தினம் கிராமப் புறத்தினுடைய உணவு உற்பத்தி என்பது விவசாயத் தொழிலாளரை, குத்தகை விவசாயியை, சிறு நில விவசாயியையே நம்பி இருக்கவேண்டும். இன்றைக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பட்டாக்கள் ஒரு கூட்டத்திடம் இருக்கிறது. அந்த நிலத்தை வெளியே எடுத்து விவசாய மக்களுக்குக் கொடுத்து கைதூக்கிவிட்டு உற்பத்திக்கு ஆக்கமளித்து அதன் மூலமாக தேசத்தினுடைய சக்தியை திரட்டுவதற்கு இந்த ஆட்சி, கட்சி முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த பட்ஜெட்டை புனர்பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நீங்கள் போகிற வழி பொல்லாத வழி அதை கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 2-3-1982 ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

104. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்மை விலை பொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 17—11—1981 ஆம் தேதியிடப்பெற்ற 2534 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விலை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராயம் (தயாரித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் துறையின் 14—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற 108 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 4(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

1982 மார்ச் 1]

106. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு சந்தன மரம் வைத்திருத்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத் துறையின் 29-8-1981 ஆம் தேதியிடப்பெற்ற 1043 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1982) 64 (A) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

34. 1982-83 ஆம் ஆண்டிற்கான 1 முதல் 16 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

35. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17 இன் விரிவான மானியக் கோரிக்கைகள்.

36. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18 மற்றும் 19 ஆகியவற்றின் விரிவான மானிய கோரிக்கைகள்.

37. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20, 22 மற்றும் 48 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

38. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21, 25, 45 மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

39. 1982-83 ஆம் ஆண்டிற்கான 23, 28 முதல் 35 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

40. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26, 27 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

41. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

42. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38 மற்றும் 51 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

43. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மற்றும் 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

44. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40 முதல் 44 வரை மற்றும் 46, 47, 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

45. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43, 55, 56 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

1982 மார்ச் 2

46. பதவிகள் சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை (1982–83) (ஆங்கிலம்).

47. 1982–83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37 பொதுப் பணிகள்– கட்டிடங்கள் மற்றும் 51– பொதுப் பணிகள் – கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

48. 1982–83 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39. சாலைகளும் பாலங்களும், 52– சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணிகுறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

49. 1982–83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதி நிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம்).

50. 1982–83 ஆம் ஆண்டில் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

51. 1982–83 ஆம் ஆண்டின் நிதி நிலைக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

52. 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

53. 1982–83 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி II திட்டங்கள்) (தமிழ், ஆங்கிலம்).

54. 1982–83 ஆம் ஆண்டுத் திட்டம் (நிதி நிலைக் குறிப்பு– திட்ட இணைப்பு (தமிழ், ஆங்கிலம்).

55. 1982–83 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

56. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

57. 1982–83 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

58. 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

1982 மார்ச் 1

59. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1982).

60. 20–2–1982 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியான தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவிற்கு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1982) பிழை திருத்தம்.

61. 19–2–1982 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழில் வெளியான 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 8/1982), 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1982) ஆகியவற்றிற்கு பிழை திருத்தம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS